# வான்புகழ் கொண்ட வள்ளுவம்

## வெளியீட்டு விழா

## அறிவாலயம்: 2-6-2005

## வெளியீட்டு உரை: **Dr**. வா.செ. குழந்தைசாமி

வான்புகழ் கொண்ட வள்ளுவம் என்ற இந்த நூலில் டாக்டர் கலைஞர் அவர்கள் 2000 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்ட வள்ளுவம் இன்றும், நாளையும் நமக்குப் பயன்படும் தகுதி கொண்டது என்பதை நிறுவியிருக்கிறார். அதில் அவையின் முன் பேசுவது பற்றிய சில குறள்களும் இடம் பெற்று இருக்கின்றன. 2000-ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட வள்ளுவம் 21-வது நூற்றாண்டு ஜூன் 2-இல், இப்பொழுது உங்கள் முன் பேசும் எனக்கும் பயன்படும் அறிவுரையைத் தாங்கி நிற்கிறது என்பதைக் கூறவிரும்புகிறேன். அவையின் முன் பேசுவது பற்றிக் கூறுவதற்கு, **சொல்வன்மை, அவை அறிதல், அவை அஞ்சாமை** என்று மூன்று அதிகாரங்களை வகுத்திருக்கிறார். பொதுவாக இந்த அதிகாரங்களைப் பற்றிப் பேசுபவர்கள் அவையின் அறிவுத்திறன், பேசுவதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல், அவையில் தரம் பற்றி அறிந்து கொள்வது, போன்றவற்றை வலியுறுத்துவது வழக்கம். அவை அனைத்தையும் விட முக்கியமாக வள்ளுவர் பேசுபவர்கட்கு இன்னொரு அறிவுரையையும் வழங்கியிருக்கிறார்.

**இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக: சொல்லின்**
**நடைதெரிந்த நன்மை யவர்.**

என்கிறார்.

**இடைதெரிந்து** என்பதற்கு கேட்பவர்களின் **செவ்வி**, அதாவது **மனநிலை** தெரிந்து என்பது பொருள். இப்பொழுது உங்கள் மனநிலை அறிந்து நான் பேச வேண்டும் என்பது அய்யன் அறிவுரை. இந்தக் கூட்டத்தின் இறுதியில் டாக்டர் கலைஞர் அவர்கள் பேச இருக்கிறார்கள். அவருக்கு முன்பு மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் பேச இருக்கிறார்கள், அதற்கு முன்பு மதிப்பிற்குரிய வை. கோ. அவர்கள் பேச இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் சொற் பொழிவுகளையும் கேட்பதற்கு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறீர்கள் எனவே என்னைப் பொருத்துவரை, என் சொற்பொழிவைப் பொருத்தவரை, உங்கள் மன நிலை எப்படி இருக்கும் என்பதை நான் உணர்ந்து பேச வேண்டும். "இவன் எப்பொழுது முடிப்பான்: நாம் தலைவர்கள் பேசுவதைப் கேட்கலாம்" என்பது நான் உங்கள் மன நிலையாக இருக்கும் என்பதை நான் உணர்ந்து பேச வேண்டும் என்பது வள்ளுவப் பெருமான் அறிவுரை. எனவே உங்கள் மன நிலையை நான் அறிந்திருப்பதால், நீங்கள் வரவேற்கத்தக்கதான ஒரு உறுதிமொழியுடன் எனது பேச்சைத் தொடங்க விரும்புகிறேன்.

அந்த உறுதிமொழி வேறு ஒன்றுமில்லை: அடுத்த 15 நிமிடங்களுக்குள் எனது பேச்சை முடித்துக் கொள்வேன் என்பது தான்.

நான் இப்பொழுது வான்புகழ் கொண்ட வள்ளுவத்துக்கு வருகிறேன். வள்ளுவர் தந்த குறளுக்கு மூன்று பரிமாணங்கள் உண்டு. நமது பண்டைப் புலவர்கள் அதை ஒரு நீதி நூலாகப் பார்த்தனர். திருக்குறள் ஒரு நீதி இலக்கியம் என்ற நூலுக்கு டாக்டர் திருநாவுக்கரசு அவர்கள் சாகித்திய அகாதெமி விருது பெற்றார். அடுத்ததாக இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளர்கள், திருக்குறளை ஒரு தலைசிறந்த இலக்கிய நயம் கொண்ட கலைப் படைப்பாகப் பார்த்தார்கள். அதைப் பற்றி எழுதினார்கள், பேசினார்கள்.

கலைஞர் அவர்களைப் பொருத்தவரை நீதிநூலான வள்ளுவத்திற்கு உரை எழுதினார். அதன் இலக்கியப்பரிமாணத்தை விளக்குவதற்கு **குறளோவியம்** எழுதினார். இந்த இரண்டையும் விட முக்கியமாகக் குறளுக்கு மூன்றாவது பரிமாணம் உண்டு. குறள் ஒரு தத்துவநூல். திராவிடப் பாரம்பரியத்தின், தமிழர்கள் சிந்தனை மரபின் பதிவாக இன்று நம்முன் இருப்பது திருக்குறள் தான். எப்படி பகவத் கீதை, வேத உபநிடத மரபிற்கு, வடமொழி, சார்ந்த பண்பாட்டிற்குப் பிரதிநிதியோ அதைப் போல திருக்குறள் திராவிடப் பாரம்பரியத்திற்கு, பண்டைத் தமிழர் தத்துவப் பார்வைக்குப் பிரதிநிதியாகும். திராவிட இனம், தமிழ் இனம், இவற்றின் சிந்தனை, தத்துவம் என்று வரும்பொழுது அவற்றைத் தாங்கும் களஞ்சியமாக இருப்பது வள்ளுவம் ஆகும்.

நீதி நூலாகிய குறளுக்கு உரை தந்த கலைஞர் அவர்கள், இலக்கியப் படைப்பாகிய குறளுக்கு ஓவியம் படைத்த கலைஞர் அவர்கள், அதன் தத்துவப் பரிணாமத்தை விளக்குவதற்கு 'வான்புகழ் கொண்ட வள்ளுவம்' என்னும் இந்த நூலை எழுதியிருக்கிறார்.

பெருமதிப்பிற்குரிய கலைஞர் அவர்களே அறிஞர் உலகும் புலவர் உலகும் அவ்வளவாக அடையாளம் காட்டத் தவறிய வள்ளுவரின் ஒரு முக்கியமான ஒரு பரிமாணத்தை, தமிழர் முன் எடுத்து வைத்த மகத்தான பெருமை உங்களுக்கு உண்டு என்பதை இந்த அவையின் முன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

வள்ளுவம் நீதி நூல் என்பது பற்றி எழுதியவர்கள் பலர் இருக்கிறார்கள். அது ஓர் சிறந்த இலக்கியப் படைப்பு என்பது பற்றி எழுதியவர்கள் பலர் இருக்கிறார்கள். அதன் தத்துவ உள்ளடக்கம் பற்றியும் ஒருசிலர், மிகச் சிலர் கூறியிருக்கிறார்கள்.. ஆனால் ஒன்றன் பின் ஒன்றாக இந்த மூன்று பரிமாணங்கட்கும் தனித்தனியாக மூன்று நூல்கள் படைத்த பெருமை கலைஞர் அவர்கட்கு மட்டுமே உண்டு.

'பண்டைத் தமிழர்களைப் பற்றி அறிந்துகொள்ள கிரேக்க நாகரிகத்துக்கு ஏத்தன்ஸ் நகரத்தில் இருக்கும் சின்னங்கள் போல, ரோம நாகரிகத்துக்கு ரோம் நகரில் இருக்கும் சின்னங்கள் போல, எகிப்திய நாகரிகத்துக்கு வான் தொட வளர்ந்து நிற்கும் பிரமிடுகள் போல

தமிழர்கள் நாகரிகத்துக்கு, அழிந்த நிலையில் நின்று அடையாளம் காட்டக்கூடிய பழங்காலச் சின்னங்கள் எதுவுமில்லை. நமக்கு இருப்பது நூல்கள்தான் அவற்றுள் :

- தமிழனுடைய மொழிப் பாரம்பரியத்தை, தமிழன் வளம் நிறைந்து, வளர்ந்த மொழிக்குச் சொந்தக்காரன் என்பதை உலகுக்கு அறிவிப்பது தொல்காப்பியம்.
- தமிழனின் வரலாற்றிற்கும், சமுதாய வாழ்விற்கும் ஆவணமாக இருப்பது சங்க நூல்கள்.
- தமிழனின் சிந்தனை மரபிற்கும் தத்துவப் பார்வைக்கு கொள்கலனாக விளங்குவது திருக்குறள்.

இந்த மூன்றும் இன்றி தமிழன் தன்னை அடையாளம் காண இயலாது, தாங்கள் இந்த மூன்றையும் மனத்திற் கொண்டு:

- தொல்காப்பியப் பூங்கா எழுதினீர்கள்
- சங்கத் தமிழ் நூல் படைத்தீர்கள்
- குறளுக்கு உரை எழுதி, ஓவியம் வரைந்து இப்பொழுது வான்புகழ் கொண்ட வள்ளுவம் கண்டீர்கள்.

  நான் அறிந்த அளவில் தமிழன் தன்னை அடையாளம் கண்டுகொள்ள தமிழனைத் தரணியில் உள்ள மற்றவர்கள் அடையாளம் கண்டுகொள்ள, இந்த அளவுக்கு முழுமையான இலக்கியச் சாட்சியம் படைத்த இன்னொரு தமிழ் மகனை என்னால் எண்ணிப் பார்க்க இயலவில்லை.

திருக்குறள் ஒரு தலைசிறந்த தத்துவ நூல் என்பதை நமது பல்கலைக் கழகங்களே முழுமையாக உணரவில்லை. ஏறத்தாழ 20-ஆண்டுகட்கு முன் தொடர் வண்டியில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தத்துவப் பேராசிரியர் ஒருவருடன் பயணம் செய்ய நேர்ந்தது. பல்கலைக் கழகத்தின் தத்துவ முதுகலை வகுப்பில் வள்ளுவரைப் பற்றி படிப்பார்கள், வாதிப்பார்கள் என்று உறுதியாக நம்பினேன். எனவே பேச்சுவாக்கில் அவரிடம் தத்துவப் பாடத்தில் வள்ளுவம் பற்றிய விவரம் மட்டும் கேட்டேன். அதற்கு அவர் சற்று ஆச்சரியப் பட்டவராய், ''வள்ளுவரா? அவரைப் பற்றித் தத்துவ வகுப்பில் கூற என்ன இருக்கிறது? அவர் எழுதி இருப்பது ஒரு நீதி நூல்தானே'' என்றார். அவரைப் பொருத்தவரை திருக்குறள் ஆத்தி சூடி போல, கொன்றை வேந்தன் போல, அதிகமாகப் போனால் நாலடியார் போல ஒரு நீதி நூல், அவ்வளவுதான். அந்த நிலைமையில் இன்றும் பெரிய மாற்றமில்லை. எதுவுமே சொல்லாதிருந்த பல்கலைக் கழகங்கள். வள்ளுவரைப் பற்றிய பல்கலைக் கழகத் தத்துவப் பாடத்தில் வள்ளுவர் என்று குறிப்பிடுகின்றன. பிளேட்டோ போல, அரிஸ்டாட்டில் போல, சங்கரர் போல, பகவத் கீதைபோல ஆழ்ந்த விசாரணைக்கு வள்ளுவர் இன்றும் உட்படவில்லை.

கலைஞர் அவர்களின் இந்த நூல் வள்ளுவத்தை அவருடைய வாழக்கை அனுபவத்தோடு இணைத்துப் பொருள் காண்கிறது. அவற்றிற்கு வள்ளுவத்தின் வழி பொருள்காணும் அணுகுமுறை மின்னலிடுகிறது.

இந்த நூலில் பெரியார் வருகிறார், அண்ணா வருகிறார், பாவேந்தர் பாரதி தாசன் வருகிறார், பேராசிரியர் வருகிறார், முத்தமிழ்க் காவலர் வருகிறார், சோமசுந்தர பாரதியார் வருகிறார், கண்ணதாசன் வருகிறார் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம். இறுதியாக வை. கோ.வும் வருகிறார் வைரமுத்துவும் வருகிறார். தத்துவம் என்பது வாழ்க்கையின் நிகழ்வுகளோடு இணைந்த அனுபவங்களின் அடிப்படையில் உண்மை காண்பது. அந்த ஒரு தத்துவ விளக்கத்தைத் தான் தமது வாழ்க்கை அனுபவங்களோடு குறளையும் இணைத்து வான் புகழ் கொண்ட வள்ளுவமாக 'டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார். எனவே வள்ளுவத்தில் என்ன தத்துவம் இருக்கிறது என்று கேட்கும் தத்துவப் பேராசிரியர்கட்குத் தொடர் கல்வித்திட்டத்தின் கீழ் வகுப்பு நடக்குமானால் **'வான் புகழ் கொண்ட வள்ளுவத்தையும்'** ஒரு பாடப்புத்தகமாக பயன்படுத்தலாம் என நம்புகிறேன்.

வான் புகழ் கொண்ட வள்ளுவம் ஆங்காங்காங்கு கலைஞர் அவர்களின் வாழ்க்கை வரலாறாகவும் மின்னலிடுகிறது. பல நிகழ்ச்சிகள்: ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறேன். ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு. உயர்நிலைப் பள்ளியில் ஏழாவது வகுப்பில் சேருவதற்காக அவருடைய ஆசிரியருடன் திருக்குவளையில் இருந்து திருவாரூர் செல்கிறார். அங்கும் நுழைவுத் தேர்வு நடத்துகிறார்கள். ஏழாவது வகுப்பில் சேரத்தகுதியில்லை என்று தீர்ப்பு: சரி ஆறாவது வகுப்பில் சேரலாமென்று தேர்வு எழுதினால் அதற்கும் தகுதியில்லை இறுதியாக ஐந்தாவது வகுப்பில் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றால், அதற்கும் நீ, திருக்குவளை சென்று இன்னும் ஓராண்டு படித்துவிட்டு வந்தால் சேர்த்துக் கொள்கிறோம் என்கிறார்கள். கலைஞர் இதை ஏற்பதாக இல்லை. ஐந்தாவது வகுப்பில் கூட நான் சேரமுடியாதென்றால் பக்கத்தில் இருக்கும் கமலாலயம் குளத்தில் மூழ்கி உயிரைவிடுகிறேன் என்று குளத்தை நோக்கி ஓடுகிறார். ஆசிரியர்கள் அரும்பாடுபட்டு, அவரை மீட்டுக் கொண்டு வந்து ஐந்தாவது வகுப்பில் சேர்த்தார்கள். அதற்கு முழுவதும் தகுதியுடையவன் தான் என நிரூபிக்கும் வகையில் எல்லாப் பாடங்களிலும் முதலாவதாகத் தேறியிருக்கிறார். டாக்டர் கலைஞர் அவர்கள் வாழ்க்கையில் பல போராட்டங்களை மேற்கொண்டவர் என்பதை விட போராட்டமாகவே வாழ்ந்தவர். அந்தப் போராட்டம் ஐந்தாவது வகுப்பில் ஆரம்பப் பள்ளியிலேயே துவங்கியது என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றில் முக்கியமாக இடம் பெற வேண்டிய செய்தி.

கலைஞர் அவர்கள் வள்ளுவருக்கு நூல்கள் வடிவில் தமது காணிக்கையைச் செலுத்தியதோடு, திருக்குறள் பீடம் அமைத்ததோடு, வள்ளுவரின் வாய்மொழிகளை

ஆங்காங்கு பொறித்ததோடு, மனநிறைவு பெற்றுவிடாமல் வள்ளுவருக்குச் சென்னையில் கோட்டம் அமைத்து, குமரி முனையில் இந்த நூற்றாண்டின் அதிசயம் எனும் தகுதி வாய்ந்த சிலையும் எழுப்பி இருக்கிறார். நமது இந்திய அரசின் சுற்றுலாத் துறையினர் நீண்ட நாட்களாகவே ஒரு பெரிய தவறு செய்து வருகிறார்கள். அந்தத் துறையின் அதிகாரிகளாகட்டும், அமைச்சர்களாகட்டும் இந்திய வரலாறோ, இந்தப் பெரிய நாட்டின் கலை இலக்கிய பின்னணி பற்றிய தெளிவோ கொண்டவர்கள் என நாம் நம்ப முடியவில்லை. தங்க முக்கரம் என்ற சூத்திரத்தை வைத்துக் கொண்டு தில்லியில் வந்திறங்கும் பயணிகளை ஆக்ரா, காஷ்மீர், ஜெய்ப்பூர் என்ற அளவில் வழி நடத்திக் கொண்டிருந்தார்கள். இன்னும் அவர்கள் அணுகுமுறையில் பெரிய மாற்றம் இல்லை. இந்த மூன்றில் எதுவும் இந்தியப் பண்பாட்டின் பழமையைப் பிரதிபலிப்பதாக இல்லை.

நான் அண்ணா பல்கலைக் கழகத்திலிருந்த பொழுது British High Commissioner Dr. Goodall என்பவர் அண்ணா பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தார். அவர் தில்லியிலிருந்து குடும்பத்துடன் சென்று தஞ்சை பெரிய கோயிலைப் பார்த்து விட்டுத் திரும்பியிருந்தார். அவர் பின்வருமாறு கூறினார். ‘‘என் போன்று அயலகத் துறையில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் மட்டத்தில் கூட தஞ்சைப் பெரிய கோயில் போன்ற உண்மையான ஒரு உலக அதிசயம் இருப்பது தெரியவில்லையே! இப்படிப்பட்ட கருவூலங்களை நீங்கள் இன்னும் பிரகாசப்படுத்த வேண்டும்’’ என்று சொன்னார். இதுநாள் வரை **முக்கரம்** அல்லது முக்கோணம் என்று இருப்பதை நமது மைய அரசின் சுற்றுலாத் துறை **நாற்கரம்** என்று மாற்றி குமரியில் இருக்கும் திருவள்ளுவர் சிலையையும் இரு கடல்கள் சங்கமிக்கும் குமரியின் இயற்கை எழிலையும் காண்பதற்கும் காணும் வழியில் மாமல்லபுரம், பெரிய கோயில் போன்றவற்றைப் பார்ப்பதற்கும் மைய அரசின் சுற்றுலாத் துறை வழிவகுக்க வேண்டும்.

இறுதியாக ஒரு யோசனை. பகவத்கீதை வேத உபநிடத மரபுகளின், வடமொழிசார்ந்த சிந்தனைப் பாரம்பரியத்தின் பிரதிநிதி என்று கூறினேன். அதன் சின்னமாக இன்று நாம் காண்பது ஒரு ரதம்; அந்த ரதத்தில் சாரதியாக கிருஷ்ணன் ரதத்தில் அமர்ந்திருக்கும் அர்ச்சுனன் ரதத்திற்கு பூட்டிய குதிரைகள் ஆகியவைதான். இது ஏறத்தாழ பகவத் கீதையின், வேத உபநிடத மரபின் சின்னமாகவே பயன்படுகிறது. தமிழர் தத்துவ மரபிற்கு வள்ளுவத்தை முன்நிறுத்தி, தேவையானால் தொல் காப்பியத்தையும் சங்க நூல்களையும் இணைத்து, பழம் தமிழ் பாரம்பரியத்தை, சிந்தனை மரபை, பிரதிபலிப்பதற்கு ஒரு சின்னத்தை உருவாக்க முடியுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். குமரி முனை வள்ளுவரை முன்நிறுத்தி சங்க நூல்களுக்கு ஏடுகளை அடையாளமாக்கி தொல்காப்பியர் அகத்தியரிடம் பாடம் கற்றதாக கருதப்படும் பொதிகையையும் இணைத்து அல்லது வேறு ஏதாவது ஒரு

வழியில் குமரி முனை வள்ளுவரை முன்னிலைப்படுத்தி தமிழர்கட்கு வான்புகழ் கொண்ட வள்ளுவனைத் தந்த கலைஞர் அவர்களே ஒரு அடையாளம் படைத்து அளித்தால் அது நிலைத்து நிற்கும். தொல்காப்பிய பூங்காவைத் தந்தவர், சங்கத் தமிழைத் தந்தவர், வான்புகழ் கொண்ட வள்ளுவனைத் தந்தவர், வள்ளுவர் கோட்டத்தையும், குமரிமுனையில் வள்ளுவனையும் எழுப்பியவர், தங்கள் அடையாளத்தை மறந்திருக்கும் தமிழர்கட்கு அவர்களுக்கு அவ்வப்பொழுது நினைவூட்டும் வகையில் ஒரு சின்னத்தையும் படைத்தளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு 82-ஆவது பிறந்த நாள் காணும் கலைஞர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரமாண்டு வாழ்கவென உலகு தழுவி வாழும் 7 1/2 கோடி தமிழர்கள் சார்பில், குறிப்பாக உங்கள் சார்பில், என் சார்பில் வாழ்த்துக் கூறி அமர்கிறேன்.

வணக்கம்.